**தலைப்பு - 409 - உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு**

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை
---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாதுகாப்பு பிரிவிற்குரிய ரூபா 423,867 செலவினமொன்று உள்நாட்டலுவல்கள் பிரிவின் செலவின விடயங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அமைச்சரவை செயலாளரின் ஆலோசனைக்கமைய மேற்கொள்ளப்பட்டது. | உரிய செலவின விடயங்களின் கீழ் கணக்கிலிடப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளக விவகார பிரிவின் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானம், அமைச்சின் புத்தகங்களின் படி ரூபா 54,416,774 ஆக இருந்த போதும் திறைசேரி அச்சீட்டுட்டுத் தாள்களின் (SA82) படி அப்பெறுமானம் ரூபா 51,093,634 ஆக இருந்தமையால் ரூபா 3,323,140 வேறுபாடு காணப்பட்டது. | உள்ளக பாதுகாப்பு பிரிவின் சொத்துக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் சொத்துக்களினை முறையாக மாற்றுப் பத்திரங்கள் மூலம் கணக்கிடப்படாமையால் ஏற்பட்ட வேறுபாடாகும். | திருத்தங்க்ள மேற்கொள்ளப் பட்டு பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |
| (இ) | அரச கணக்குகள் திணைக்களத்தின் 2021 பெப்ரவரி 24 ஆந் திகதிய SA/GFS/01/01/09 -Volume ii கொண்ட கடிதத்தின் படி கட்டிடத்தின் மதிப்பீட்டு பெறுமதி மற்றும் அபிவிருத்தி | "நிலமெதுர" நிர்வாகக் கட்டிடத் தொகுதியினை ரூபா 419,000,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.. | கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்களில் கட்டிட நிர்மாண வேலைகளின் பெறுவனவு முடிக்கப்படாத வேலைகள் என |

| | | |
|---|---|---|
| செலவினங்களினை கணக்கிலிடப்பட வேண்டியுள்ள போதிலும் 2015 ஆம் வருடம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 419,000,000 மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | கணக்கிலிடப் பட்டுள்ளமை யினால் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் விசாரிக்கப்பட்டு அபிவிருத்தி செலவுகளையும் கணக்கிலிடு வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

2. நிதிசார் மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் மதிப்பீடுகள் இயன்றளவு சரியானதாக தயாரிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் 16 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 16 மீண்டெழும் செலவின விடயங்களுக்கான மொத்த ஒதுக்கீடுளும் முறையே ரூபா 341,400,000 மற்றும் ரூபா 14,745,000 என மொத்தம் ரூபா 356,145,000 சேமிக்கப்பட்டிருந்தன. | Covid-19 தொற்று காரணமாக எதிர்பார்த்த செலவுகள் மேற்கொள்ளப்படாமை 21/1596/304/134 இலக்கம் கொண்ட 2021.08.31 திகதிய அமைச்சரவையின் தீர்மானப்படி செலவினங்களை கட்டுப்படுத்தும் படி பெற்றுக் கொடுக்கப்பட்ட முன்மொழிவினை செயற்படுத்தப்பட்டதன் காரணமாக செலவின விடயங்கள் தொடர்பான அலுவல்கள் நிறைவேற்றப்படாமையினால் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டன. | நி.பி.50(ii) இன் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 38 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 48 மீண்டெழும் செலவின விடயங்கள் தொடர்பாக மொத்த தேறிய ஒதுக்கீடு ரூபா 6,569,467,625 ஆனதுடன் மீளாய்வாண்டு இறுதியில் அச்செலவின விடயங்கள் தொடர்பான மொத்தச் செலவு ரூபா 3,579,472,619 ஆக இருந்தமையால் சேமிப்பு ரூபா 2,989,995,006 ஆகும். அது மொத்த ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 16 முதல் நூற்றுக்கு 99 இடையிலான வீச்சில் காணப்பட்டத. | - மேற்படி - | - மேற்படி - |

2.2 எல்லை மீறல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட குறைந்த பட்ச பெறுவனவு எல்லையான ரூபா 600 மில்லியனை விடவும் உண்மையான குறைந்தபட்ச பெறுவனவு மீதி ரூபா 142,047,589 ஆல் வீழ்ச்சியடைந்துள்ள போது அங்கீகரிக்கப்பட்ட குறைந்த பட்ச பெறுவனவு எல்லையினை ரூபா 525 மில்லியன் வரை ரூபா 75 மில்லியன் மாத்திரம் குறைத்துக் கொள்வதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி தேசிய வரவு செலவுததிட்ட திணைக்களத்தின் பரிந்துரை கிடைக்கப் பெற்றிருந்தது. அதன்படி மீதி ரூபா 67,047,589 அளவிலான எல்லை மீறல் அவதானிக்கப்பட்டது. | 2021.12.31 இல் உள்ளவாறான முற்பண பீ கணக்கின் கீழ் பெறுவனவு 409011 ஆக ரூபா 457,952,411.16 மற்றும் 409012 ஆக ரூபா 114,901,392.09 பெறப்பட்டுள்ளதுடன் அதன்படி மொத்த பெறுவனவுகளின் தொகை ரூபா 572,853,803.25 ஆவதுடன் எல்லை மீறல் ஏற்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை பின்பற்றப்பட வேண்டும். |

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்களாக சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் காட்டப்பட்டிருந்த ரூபா 512,354,690 நிதிக்கூற்றின் பொறுப்புக்களுக்கான கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்காத துடன் நிதிக்கூற்றுக்களில் இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 11,378,934.00 பொறுப்புக்கள் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் பொறுப்புக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சிகாஸ் முறைமையில் தரவுகள் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் முறைமையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பொறுப்புக்களை upload செய்வதற்கு முடியாது போயிற்று. | பொறுப்புக்களை சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | எழுச்சி பெறுவோம் பொலநறுவைத் திட்டத்தின் கீழ் ரூபா 242,662,629 நெடுஞ்சாலை மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சிடம் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புக்களாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது உள்நாட்டு அலுவல்கள் பிரிவினால் இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரையில் அப்பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியிடம் போதிய அளவிலான ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுநிதி பெற்றுத்தரும் படி கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் தேவைப்படும் ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுநிதி பெற்றுத்தரப்படாமையினால் இப்பொறுப்புக்ககள் தீர்க்கப்பட முடியாது போய் உள்ளன. | பொறுப்புக்களை தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் பிரமாணங்களுடனான ஏற்பாடுகளுடன் இணங்கா சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது சுதந்திர கொண்டாட்ட ஏற்பாடுகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர் களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா 827,530 வழங்கப்பட்ட போதிலும் அதற்கான தாபன பணிப்பாளர் நாயகத்தின் முன் அனுமதி பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2022 சுதந்திர கொண்டாட்ட ஏற்பாடுகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதற்காக தாபன பணிப்பாளரின் முன்அனுமதி பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டது என்பதனை அறியத் தருகின்றேன். | முன்அனுமதி பெறப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் படக் கூடாது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி 427 | திணைக்கள புத்தகங்கள், திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 04 மாவட்டங்களில் அரச உத்தியோகத்தர்களின் முற்பண நிலுவைகளுக்கிடையே ரூபா 2,175,542 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிலுவைகளுக் கிடையிலான வேறுபாடுகளினை இனங்கண்டு அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 வெளிநாட்டு உதவி திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மண்சரிவுகளின் ஏற்படும் அனர்த்தங்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்காக அனர்த்த பிரிவின் வருடாந்த | யப்பான் சர்வதேச கலாசார ஏஜன்சியின் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ் அத்திட்டம் | நன்கொடைகளாக பெறப்பட்ட பண அளவினை பற்றி விபரங்கள் |

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டின் மூலம் 409-2-11-13-2509(13) மற்றும் 409-2-11-9-2509(13) செலவின விடயங்களின் கீழ் வெளிநாட்டு நன்கொடைகள் முறையே ரூபா 150,000,000 மற்றும் ரூபா 130,000,000 ஒதுக்கப்பட்டிருந்தன. இவ்வொதுக்கீடுகள் முழுமையாக சேமிப்புக்கள் எனக் காட்டப்பட்டு அச்சேமிப்புக்களுக்கான காரணிகளாக இந்நிகழ்ச்சித் திட்டம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்படுவதனால் செலவினப் பதிவுகள் முன்வைக்கப்படாமையினை சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், வருடத்தினுள் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு எவ்வளவு என்பதையோ அல்லது செலவு செய்யப்படாமையினை உறுதி செய்யக்கூடிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்படாமல் மொத்த தொகையினையும் சேமிப்பாக காட்டப்பட்டமை ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்தது. | செயற்படுத்தப்படுவதற்காக இவ் ஒதுக்கீடு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக ஒதுக்கப்படுவதாயும் அவ்வாறு தொண்டர் நிறுவனத்தினால் ஒதுக்கப்படும் நிதியினை நேரடியாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் கிடைக்கப் பெறப்படாததுடன் திட்டத்தின் தொழில்நுட்ப உபகரணங்களுக்கான கொடைகள் உள்ளிட்ட சகல திட்டங்களுக்கான கிரயங்களும் அதன் மூலமாக மேற்கொள்ளப்படும். அச்செலவினப் பதிவுகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்படாமையினை அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் அறியத் தரப்பட்டுள்ளது. | பெற்றுக் கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ‘‘நிலமெதுர’’ கட்டிடத்தின் III ஆம் கட்டத்தினை செய்து முடித்தல் மற்றும் அதற்கான பராமரிப்பு சேவையினை வழங்கல். | | |
| (i) ‘‘நிலமெதுர ‘‘ கட்டிடத்தின் III ஆம் கட்டத்தினை நிர்மாணிப்பதை 2019 திசெம்பர் 26 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு 2021 செப்தெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் அமப/21/1689/303/063-1 கொண்ட அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் பொறியியல் | Date of Completion of Contract உள் பணிக் கோளாறுகளினை திருத்துவதற்கான காலம் (Defect Notification Period) என ஒரு வருட காலம் (365 நாட்கள்) ஒப்பந்த உடன்படிக்கையில் Contract Data வில் 11..3.7 பிரகாரம் உட்பட்டுள்ளது. அதன்படி ஒரு வருட காலத்திற்கான தாமதக் கட்டணம் | தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியமை மற்றும் பணம் செலுத்தப் படுவதற்கான தாமதத்தினை தடுப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளப் படாமையினை தொடர்பாக நிதிப் |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலுகளுக்கான மத்திய ஆலோசனைச் செயலகம் (CECB) மூலம் சமர்பப்பிக்கப்பட்ட செயலாற்றல் அத்தாட்சியின் படி 2020 திசெம்பர் 26 ஆந் திகதி வேலை முடிக்கப்பட்டிருந்தது. ஆனையால் ஒப்பந்தப்படி ஒரு வருடத் தாமதக் கட்டணமாக ரூபா 174.35 ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறாயினும், ஒப்பந்தக்காரருக்கு தாமதமாக பணம் செலுத்தப்பட்டமைக்காக கொழும்பு மாவட்ட செயலாளரினால் ரூபா 17,112,625 வட்டி பணத்தினை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட தேவைப்படாமை மற்றும் கட்டுநிதியினை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் கொடுப்பனவு தாமதப்படுத்தப்பட்டிருந்தமை. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ii) | மேற்பார்வை மற்றும் பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்வதற்கு போதியளவான பணிக் குழாமினை இல்லாமையின் காரணமாக கட்டிடத்தின் பராமரிப்பு சேவைகளினை வழங்குவதற்கான பொறுப்பினை CECB நிறுவனத்திடம் வழங்குவதற்காக 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதிய இலக்கம் HA/07/2020 கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தினை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்பத்திரத்தின் பந்தி இலக்கம் 1.5 மூலம் பராமரிப்பு சேவைக்கான பணிக் குழாமினை 04 என காட்டப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் மூலமாக அறியத் தரப்பட்டிருந்ததன் படி மாவட்ட செயலகத்தின் பராமரிப்பு பிரிவின் பணிக் | சேவையில் ஈடுபட்டிருந்த பொறியியல் பிரிவின் பணிக் குழாமினைக் கொண்டு சம்பந்தப்பட்ட சேவைக்கான தேவைப்பாட்டினை பூர்த்தி செய்து கொள்ளப்பட முடியாமையினை மேலதிக செயலாளரினால் (தொழில்நுட்பம்) சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. ஆகையால் நிலமெதுர கட்டிடத் தளத்தின் பராமரிப்பு அலகினையில் நிலவும் துரித சேவைகளுக்கான தேவைப்பாட்டினை கவனத்திற் கொள்ளப்பட்டு அமைச்சின் மேல்மட்ட முகாமைத்துவத்தின் தீர்மானப்படி ‘‘நிலமெதுர’’ கட்டிடப்பணியின் ஆலோசனை நிறுவனமாக செயல்பட்ட அது போன்றே நீண்டகால அனுபவமுள்ள CECB நிறுவனத்திடம் பராமரிப்பு பணிகளினை உடன்படிக்கையிடப்பட்டு ஒப்படக்கப்பட்டது. அதன்படி | பராமரிப்பு கிரயத்தினை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குழாமிலுள்ள 03 பேரின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமை பற்றி குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. ஆகையால், பராமரிப்பு மேற்கொள்வதற்கு போதியளவான ஊழியர் எண்ணிக்கை இல்லையென கருத்து தெரிவிப்பதை கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது. மேலும் கணக்காய்வினை மேற்கொள்ளப்பட்ட திகதியான 2022 ஏப்ரல் 18 ஆந் திகதி வரையிலும் பராமரிப்பு அலகொன்றினை தாபிப்பதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அமைச்சரவையின் அனுமதிப் படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | பராமரிப்பு மற்றும் சேவைகளினை வழங்கும் அலுவல் CECB நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்காக மேற்படி அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2020 ஒக்தோபர் 13 ஆந் திகதிய இலக்கம் அமப/20/1432/303/016 கொண்ட அமைச்சரவை மூலம் அக்காரியத்திற்காக அரச நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் கோருவதற்கான தீர்மானம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன்படி பொறியியல் அலுவல்களுக்கான மத்திய ஆலோசனைச் செயலகம் ரூபா 25,500,000 மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் ரூபா 35,068,272 என விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பெறுமதி ரூபா 28,689,501 வரை அதிகரிக்கப்பட்டு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் | பொறியியல் பிரிவினால் ஆதார பிரேரணையொன்று மாத்திரம் பெறுகை பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிறகு அமைச்சு, கொழும்பு மாவட்ட செயலகம் உள்ளிட்ட இது தொடர்பான ஏனைய பிரிவுகளுடன் கலந்துரையாடப்பட்டு முறையாக பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | அரசுக்கு ஆகக்கூடிய நன்மைகள் கிடைக்கும் படியாக பெறுகைகளினை மேற்கொள்வது பெறுகைக் குழுக்களின் பொறுப்பாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோவையின் 1.2.1 வழிகாட்டலின் பிரகாரம் வெளிப்படைத் தன்மை மற்றும் பெறுகையின் உச்ச கட்ட நன்மைகளினை பெற்றுக் கொள்வதற்கு சுதந்திரமான பொறியியல் மதிப்பீடொன்றினை தயாரிப்பதற்கு செயற்படாது CECB நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தேச மதிப்பீட்டின் விலைமனுக்களை உபயோகப்படுத்தப்பட்டு பொறியியல் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அவவாறு இருக்கையில் அந்நிறுவனத்திடமிருந்தும் விலைமனு கோரப்பட்டு ஒப்பந்தத்தினை அந்நிறுவனத்திற்கேயே ஒப்படைக்க்பட்டமை அபிப்பிராய பேதத்தினை உண்டு பண்ணும் விடயமாக இருந்தது. | | |
| (ஆ) | வீட்டுத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல்: | | |
| (i) | வீட்டுத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதனை துரிதப்படுத்துவதற்கு பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்வதற்கு தற்போதுள்ள காலஎல்லை போதுமானதாக இல்லாமை மற்றும் நில வீட்டுத் தளபாடங்கள் நிர்மாணிப்பினைக்கு உட்படுத்தப்பட்டு (Builtin) நிர்மாணிக்கும் தேவைப்பாடு இருப்பதாக பல தரப்பட்ட காரணங்களை முன்வைக்கப்பட்டு கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரரிடமே இப்பெறுகையினை | அமைச்சினை இக்கட்டிடத்தில் தாபிக்கப்படுவது பற்பல காரணங்களினால் 1 ½ வருட காலம் தாமதிக்கப்பட்டு 2019.07.25 ஆந் திகதி நடைபெற்றது. இவ்வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தம் 2019.04.30 திகதியன்று கையளிக்கப்பட்டமையும் அமைச்சினை தாபிக்கப்பட்டமையும் நேரொத்தவாறு நடந்தமையினால் எதிர்பார்க்கப்பட்ட தேவைப்பாட்டினை முறையாக நிறைவேற்றிக் கொள்வதற்கு இடர்பாடு ஏற்படவில்லை. | காலவரம்பினை நிச்சயிக்கப்பட்டு திட்டமிடப்பட்டு செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு 2018 சனவரி 10 ஆந் திகதிய இலக்கம் அமப/17/2912/721/003-1 கொண்ட அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறாக இருந்த போதிலும் கொள்வனவுக்கான விலைமனு ஆவணங்களினை அங்கீகரித்துக் கொள்வதற்கு ஒரு வருட காலம் தாமதிக்கப்பட்டு 2019 சனவரி 14 ஆம் திகதி மேற்கொள்ளப் பட்டிருந்தது. | | |
| (ii) | கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட அலுவலுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா 200 மில்லியன் ஆயினும் அக்கொள்வனவுக்காக க்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுவின் பெறுமதி ரூபா 229,000,000 இருந்தது. ஆகையால், மொபயில் ரெக்ஸ் அளவினை 448 முதல் 150 வரை குறைக்கப்பட்டு ரூபா 199,068,993 பெறுகையினை வழங்குவதற்கு 2019 ஏப்ரல் 25 திகதி அமைச்சின் பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறாக இருந்த போதிலும் தேவைப்படும் ஒதுக்கீடு இல்லாதிருந்த போதிலும் மேற்படி விலைமனுவின் கீழாகவே மீதி 298 ராக்கைகளை ரூபா 29,902,424 கொள்வனவு மேற்கொள்வதற்கு 2019 யூலை 03 திகதி அக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகைக்கான தீர்மானத்தை பெற்றுக் கொண்டதன் பிறகு ஒப்புதல் கடிதத்தினை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டதுடன் அதன்படி சட்டபூர்வமாக ஒப்பந்தம் தாபிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறாயினும், கொள்வனவுக்கான ஒதுக்கீட்டு அங்கீகாரத்தினை 2021 நவம்பர் 15 ஆந் திகதிய அமப/21/1921/303/152 கொண்ட அமைச்சரவை அனுமதி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (iii) | அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரரிடமே இப்பெறுகையினையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் சில வீட்டுத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வேறு நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு நூற்றுக்கு 10 வீத இலாப இடைவெளியுடன் விநியோகிக்கப்பட்டிருந்த மையினால் அரசுக்கு ரூபா 17,484,813 இழப்பீடு ஏற்பட்டிருந்தது. | இவ்வாறு பிரதான ஒப்பந்தக் காரரினால் ஒப்பந்தம் வழங்கப்படுதல் பெறுகை செயற்பாட்டுத் தொடரில் ஒரு சாதாரண செயலாவதுடன் அவ்வாறு செய்வதனை தடுக்க வேண்டுமாயின் அது தொடர்பாக சொற் பிரிவொன்றினை விலை மனுப்பத்திரத்தில் உட்படுத்தப்பட வேண்டும். இவ் ஒப்பந்தம் தொடர்பாக அவ்வாறான சொற் பிரிவொன்று விலை மனுப்பத்திரத்தில் உட்படுத்தப்பட்டில்லா மையினால் சாதாரண நடைமுறையினை பின்பற்றப்பட்டுள்ளது. | அரசுக்கு ஆகக்கூடிய நன்மையினை பெற்றுத்தரக் கூடியவாறு செயற்பட வேண்டும். |
| (இ) | காலி கேட்போர் கூடத்தை நிர்மாணித்தல் | | |
| (i) | முறையான சாத்தியக் கற்றலின்றி ரூபா 1,700 மில்லியன் ஆன ஆரம்ப கிரய மதிப்பீட்டினை தயாரிக்கப்பட்டு ரூபா 2,656.88 க்கு ஒப்பந்த்தினை வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகும் போது அதன் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 3,154.88 மில்லியனாக இருந்தது. | விலைமனு செயற்பாட்டு தொடரின் ஆரம்பத்தில் விலைமனுதாரர் சிலர் இருந்த போதிலும் கிரய முன்மொழிதலில் இரண்டு விலைமனுக்கள் மாத்திரம் தகுதி பெற்றது. தெரிவான விலை மனுவின் பெறுமானம் ரூபா 2,656.88 ஆகும். ஆனால் எதிர்பாராத படி நிலத்தில் ஏற்பட்ட நிலைமை காரணமாய் ஒதுக்கல் அளவு போதாமையினால் மேலதிகமாக ரூபா 498 மில்லியன் ஒதுக்குவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. | முறையான சாத்தியக் கூற்று கற்றலுடனும் மற்றும் திட்டமிடப்பட்டும் செயலாற்றப்பட வேண்டும். |
| (ii) | கணக்காய்வு திகதியாகும் போது முற்பணம் உள்ளிட்ட ரூபா 717 மில்லியன் (வரி உட்பட) | ஒதுக்கீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதி இல்லாமையினாலும் மற்றும் | அரசுக்கு செய்யப்பட்டுள்ள இழப்பீடு தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஆலோசகரால் பரிந்துரை செய்யப்பட்ட கையிருப்பு மற்றும் சீட்டுக்கள் ரூபா 238.95 மில்லியன் (வரி உட்பட) ஆகும். ஆயினும், கேட்போர் கூட ஆரம்பக் கட்ட நிர்மாணிப்புக்கள் மாத்திரம் மேற்கொள்ளப் பட்டுள்ளதனால் செலவிடப்பட்டிருந்த தொகை பொருளாதார பயனற்ற செலவாக இருந்தது. | ஒப்பந்த கால எல்லை 2021.01.29 திகதியில் முடிவடைந்துள்ளதால் பற்றுச்சீட்டுக்களுக்கு பணம் செலுத்துவது தாமதமாயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முற்பணமாக ரூபா 475,958,822.38 ஒப்பந்த கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரருக்கு முழு முற்பணத் தொகையினையும் செலுத்தப்பட்டுள்ளமையால் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கையிருப்பிலுள்ள பற்றுச் சீட்டுக்களின் பெறுமதியை கழித்ததன் பின்னர் ஒரு சிறு தொகை மாத்திரம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டி வருமென ஊகிக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் பொறுப்புக் கூற வேண்டும். |
| (ஈ) | பொலிசெக் உணவுகள் 50,000 கொள்வனவு செய்தல் | | |
| | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையம் எதிர்வரும் காலப்பகுதியில் வட கிழக்கு பருவமழை தீவிரமடையும் போது நாட்டில் வடக்கு கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களில் ஏற்படக் கூடிய அவசர தேவையின் போது பாவனை மேற்கொள்வதற்கு 15,000 பொலிசெக் பைகள் கொள்வனவு செய்வதற்கு 35 நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும் அவற்றில் 03 நிறுவனங்கள் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீண்டும் 2021 நவம்பர் 08 திகதி அவசர தேவைப்பாடாக காட்டப்பட்டு பொலிசெக் பைகளின் தேவைப்பாட்டினை 50,000 ஆக அதிகரிக்கப்பட்டு | எதிர்பார்த்தவாறு 2021 வவருடம் வடகிழக்கு பருவ காலம் அதிதீவிரமடையாமையினால் இப்பொலிசெக் பைகளினை பாவனை மேற்கொள்ளும் தேவைப்பாடு ஏற்படவில்லை. எவ்வாறாயினும், எதிர்வரும் எவ்வித அனர்த்த நிலைமையிலும் பாவனை மேற்கொள்ளக் கூடிய காப்புத் தொகையாக இவற்றினை வைத்துக் கொள்ள முடியும். | அத்தியாவசிய மான கொள்வனவுகளை மாத்திரம் மேற்கொள்வது அதிகாரிகளினது பொறுப்பாகும். |

| | | |
|---|---|---|
| பெக்ஸ் மற்றும் ஈமெயில் மூலம் அதன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் படி மேற்படி 03 நிறுவனங்களிடமும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன்படி 2021 திசெம்பர் 24 ஆந் திகதி ரூபா 3,024,000 ஆன கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. வடகிழக்கு பருவ காலம் அதி தீவிரமடையும் முன்னர் அவசர தேவைப்பாடாக கருதி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பொலிசெக் பைகள் பாவனை செய்யப்படாமையினால் இக்கொள்வனவு அவசர நிலைமை காரணமாகக் கொள்ள முடியாது. | | |

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ‘‘நிலமெதுர’’ கட்டிடத்தை தாபிக்கப்பட்டுள்ள காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 458,900,000 என கணக்கிலிடப்பட்டிருந்த போதிலும் காணியை இன்னும் அமைச்சு கையேற்கவில்லை. | இக்கட்டிடம் அமைந்துள்ள காணியை முறையாக கையேற்றுத் தரும்படி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் மூலம் காணி ஆணையாளர் அதிபதியிடம் தற்போது கூட முறையான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | காணியை கையேற்பதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 வருடம் ஒரு அமைச்சிலிருந்து வேறு இரு அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 1,258,061 வீட்டுத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 71 எண்ணிக்கையினை புத்தகங்களிலிருந்து தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாக, உள்ளகப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளிடம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பொருள் உருப்படிகள் தொடர்பாக பெற்றுக் கொண்டமைக்கான பணிப்பினை மாத்திரம் இதுவரை பெறப்படவில்லை. | பெற்றுக் கொள்ளப்பட்ட மைக்கான பணிப்பினை பெறப்பட்டு சொத்துக்களை புத்தகங் களிலிருந்து தள்ளுடி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேசைகள் கொள்வனவு செய்யும் போது அதன் உதிரிப்பாகமாக கிடைக்கப் பெற்றிருந்த 18 பெடஸ்டல்கள் உள்ளக பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சிடம் 2021 வருடம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன. இப்பெடஸ்டல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு பாவனைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அப்போதிருந்த உள்ளக பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் மூலமாக மேசைகள் கொள்வனவு மேற்கொள்ளும் போது அவற்றின் உதிரிப்பாகங்களாக கிடைக்கப் பெற்றிருந்த 18 Pedesl மேற்கொண்டும் அதே இடத்திலேயே வைத்துக் கொள்வதாக 2021.03.03 திகதி கிடைக்கப் பெற்ற கடிதம் மூலம் அறியத் தரப்பட்டுள்ளது. அதற்காக 2021.03.05 அமைச்சு அங்கீகாரம் கொடுத்துள்ளது. | 18 பெடஸ்டல்களும் பெற்றுக் கொள்ளப்பட்டு மேசைகளுக்காக பாவனை மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஈ) | அமைச்சின் கீழுள்ள 35 உல்லாச விடுதிகள் மற்றும் அவற்றிற்கு சொந்தமான காணிகளினை கையேற்கப்பட்டு மற்றும் அவற்றினை மதிப்பீடு மற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சகல மாவட்ட செயலகங்களுக்கும் உல்லாச விடுதிகள் அமைந்துள்ள காணியின் உரிமை (உறுதி / வரைபடம்) கட்டிடங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் கட்டிடங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் பற்றி விசாரிக்கப்பட்டு 2022.05.25 திகதியிடப்பட்ட கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உல்லாச விடுதிகளின் உரிமையின் சிக்கல் அவிழ்க்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | உள்நாட்டு அலுவல்கள் பிரிவுக்குச் சொந்தமான 07 வாகனங்கள் மற்றும் அனர்தத முகாமைத்துவப் பிரிவுக்குச் சொந்தமான 06 வவாகனங்கள் வேறு திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ்வாகனங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் முறையாக கையளிக்கப்படவோ அல்லது மீளப் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்காலிக அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள வாகனங்களை மீண்டும் இவ்வமைச்சிடம் கையளிக்கும் படி பல சந்தர்ப்பங்களில் வேண்டப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் மீண்டும் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | முறையாக கையளிக்கப்படல் அல்லது மீளப் பெறல் மேற்கொளளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 05 வருட காலத்திறகு மேலாக 28 மின் உற்பத்தி இயந்திரங்கள் களஞ்சியசாலையில் கிடக்கப் பெற்றிருக்கையில் சென்ற வருடம் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தினால் 14 மின் உற்பத்தி இயந்திரங்கள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு விநியோகம் செய்யப்படாது களஞ்சிய சாலையில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. மேலும் 2019 வருடம் கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட 255 டாபொலின் சீட்டுக்கள் விநியோகம் செய்யப்படாதிருந்தன. | மாவட்டங்களுக்கிடையே விநியோகம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் மின் உற்பத்தி இயந்திரங்களை வாகனங்கள் மூலம் கொண்டு செல்வதில் உள்ள கஷ்ட நிலைமை காரணமாக சில மாவட்டங்களுக்கு அவற்றினை கொண்டு செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று கி.வொ. 03 கொள்ளளவினைக் கொண்ட மின் உற்பத்தி இயந்திரங்கள், அனர்த்த சந்தர்ப்பங்களின் போது மக்களை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் பாதுகாக்கப்பட்ட மத்திய நிலையங்களுக்காக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் நன்கொடையாக பெறப்பட்டுள்ள கொள்ளளவில் விசாலமான மின் உற்பத்தி இயந்திரங்கள் அதற்காக உபயோகப்படுத்த முடியாமை அதற்கு காரணமாகும். | தேவையற்ற கொள்வனவுகள் மேற்கொள்ள வேண்டாததுடன் மற்றும் மின் உற்பத்தி இயந்திரங்களை விநியோகம் மேற்கொள்வதற்கு அல்லது பயனுள்ள காரியத்திற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை ரூபா 22,671,704 ஆக இருந்தது. அதில் 03 மாதங்களுக்கு மேலான நிலுவைகளில், மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 8,415,764, ஓய்வு பெற்றுச்சென்ற | இந் நிலுவைக் கடன் மீதிகளினை அறவிட்டுக் கொள்வது தொடர்பாக தற்போதைக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட செயலகங்களை அறிவுறுத்தப்பட்டு முன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 1,225,452, சேவையினை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 1,316,782, மரணமடைந்த உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 1,186,395, வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 332,753 உம் ஆக மொத்தம் ரூபா 12,477,146 அறவிடப்படாதிருந்ததுடன் அதில் 05 வருடங்கள் விஞ்சிய நிலுவை ரூபா 951,530 ஆக இருந்தது. | | |
| (ஆ) | அனர்த்த முகாமைத்துவப் பிரிவு: | | |
| | மண்சரிவு அச்சுறுத்தல் மற்றும் மண்சரிவுகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் திட்டம் 2017 வருடம் ஆரம்பிக்கப்பட்டு 2021 வருடம் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இத்திட்டத்திற்கென ரூபா 850 மில்லியன் ஒதுக்கீடு பெற்றுத் தரப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 651 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதில் 250 வீடுகளின் வேலைகள் செய்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 36 வீடுகளின் வேலைகள் பூர்த்தி செய்ய முடியாது போய் இருந்தது. | வீடுகள் நிர்மாணிக்கும் தாமதத்தினை தவிர்த்து கொள்வதற்காக தனது உடல் உழைப்பினைக் கொண்டு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு சாத்தியமற்ற பயன்பெறுநர்களுக்காக ஒப்பந்தக்காரர் மூலமாக வீடு கட்டிக் கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை தற்போது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தாமதங்களினை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு திட்டத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கேகல்ல பிரதேசத்தில் சேதமடைந்த காணிகளில் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 124 வீடுகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 70 மில்லியன் ஒதுக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் ரூபா | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| 13.67 மில்லியன் செலவிடப்பட்டு 34 வீடுகள் மாத்திரம் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளன. | | |
| (ஈ) கண்டி மாவட்டத்தில் மண்சரிவு அபாயத்திற்குட்பட்ட நபர்களை மீள் குடியேற்றும் திட்டம் | | |
| (i) கண்டி மாவட்ட பிரதேச செயலகங்கள் 20 இல் பிரதேச செயலகங்கள் 08 அதி அபாய வலயங்களில் வசிக்கும் குடும்பங்களை அவ்விடங்களிலிருநது ஒதுக்கப்பட்டு மீள் குடியேற்றப்படுவதற்கான பிரதி பயன் பெற்றுக் கொடுக்கும் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 0 முதற்கொண்டு நூற்றுக்கு 19 வரையிலான கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | இதுவரை கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பிரதிபயன் பெற்றுக் கொடுப்பதனை துரித கதியில் முடிக்கப்பட வேண்டும். |
| (ii) 2021 பெப்ரவரி 24 ஆந் திகதிய பொது வியாபாரக் குழுக் கூட்ட பரிந்துரை இலக்கம் 10 பிரகாரம் அபாயகர இடங்களில் மீள் குடியேற்றப்படுவதனை தடுப்பதற்காக நிலையான சட்டபூர்வ நடவடிக்கைககளினை பெற்றுத்தரும் வரை முழு மாவட்டத்திற்கும் தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையிலான சுற்றறிக்கை வெளியிடப்பட்டிலாததுடன் 2005 இன் 13 ஆம் இலக்கம்இடர் முகாமைத்துவ சட்டமூலத்தின் திருத்தங்க்ள மேற்கொள்ளப்பட்டு வருவதனை அவதனிக்கக் கூடியதாகவிருந்தது. | தற்போது அனர்த்த முகாமைதுவ சட்ட மூலத்தினை திருத்தும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொது வியாபார குழுக் கூட்ட பரிந்துரைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (iii) தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது கண்டி மாவட்ட 07 பிரதேச செயலங்களில் அனர்த்தத்திற்கு உள்ளான 272 குடும்பங்களை மீள் | இதுவரை கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | அபாயகர இடங்களிலிருந்து குடும்பங்களை அப்புறப்படுத்து வதற்கான துரித வேலைத் |

| | | | |
|---|---|---|---|
| | குடியேற்றும் மாற்றுமுறையினை நிராகரிக்கப்பட்டமையினால் அவர்களை அபாயகர இடத்திலிருந்து நீக்குவதற்கு வேற்று முறையொன்றினை கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி வரையிலும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | | திட்டமொன்றினை செயற்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | மாத்தளை மாவட்டத்தில் மண்சரிவு அபாயத்திற்கு உள்ளான நபர்களை மீள் குடியேற்றும் திட்டம்: | | |
| (i) | மாத்தளை மாவட்டத்தில் 05 பிரதேச செயலங்களில் அதி அபாயகர வலயங்களில் வாழும் குடும்பங்களை அவ்விடங்களிலிருந்து நீக்கப்பட்டு மீள் குடியேற்றும் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 13 முதல் நூற்றுக்கு 38 வரையிலான மட்டத்தில் இருந்தது. | - மேற்படி - | அதிஅபாயகர வலயங்களில் வாழும் குடும்பங்களை துரிதகதியில் நீக்கப்பட்டு வேறு இடங்களில் குடியமர்த்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | ரத்தோட்டை பிரதேச செயலகத்தில் மீள்குடியேற்றப்படும் மூன்று பயன்பெறுநர்களுக்கு தலா ரூபா 400,000 வீதம் 3 ஆவது தவணைப் பணத்தையும் 2020 மே 31 ஆந் திகதியுடன் விடுக்கப்பட்டு 01 வருடத்திற்கு மேலான கழிந்து போயுள்ள போதிலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி வரையும் மீதி தவணைப் பணத்தின விடுவிப்பதற்கு மற்றும் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | மீதி தவணைப் பணத்தினையும் விடுவிக்கப்பட்டு மீள்குடியமர்வினை துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | உக்குவல பிரதேச செயலக பிரதேசத்தில் காணியொன்றினை கொள்வனவு செய்யப்பட்டு வீடுகளை நிர்மாணிக்கும் | - மேற்படி - | முறையான மேற்பார்வையின் பெறுநர்களுக்கு பணம் விடுவிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றுவாய்ப்பின் கீழ் குடியமர்த்தப்படும் மூன்று பயன்பெறுநர்களுக்கு 2019 வருடம் ஆகும் போது மொத்தம் ரூபா 1,800,000 பிரதிபலன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அபாயத்திற்குட்பட்ட பிரதேசத்திலேயே குடியமர்ந்துள்ளதனை அவதானிக்கப்பட்டது. | | வேண்டியமை மற்றும் அபாயத்திற்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து நீக்குவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். |
| (iv) | உக்குவல பிரதேச அலுவலக அதிகார பிரதேசத்தில் எனசல்மட முடிக்குரிய காணியினுள் 25 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 25 பயன்பெறுனர்களுக்கு ரூபா 6,400,000 ஆனது 2019 திசெம்பர் 13 இல் உள்ளவாறாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வீடுகளின் வேலைகள் முடிக்கப்படாதிருந்தமையினால் காடுகள் வளர்ந்து இத்துப் போன நிலைமையில் இருந்ததுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி வரையும் பயன்பெறுநர் அபாயத்திற்குட்பட்ட வீடுகளிலேயே குடியமர்த்திருந்தனர். | - மேற்படி - | - மேற்படி - |
| (v) | மாத்தளை பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் அதி அபாயத்திற்குட்பட்ட வலயங்களில் வாழ்வதாக இனங்காணப்பட்டுள்ள 152 குடும்பங்களுக்கு 2022 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையும் பிரதிபயன் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 வருடம் பதிவு செய்து கொள்ளப்பட்டிருந்த 09 பயன்பெறுனர்களுக்கும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி | - மேற்படி - | இனங்கண்டு கொள்ளப்பட்ட குடும்பங்களுக்கு தாமதமின்றி பிரதிப்பயன் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் பிரதிபயன் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (vi) | யட்டவத்தை பிரதேச செயலகத்தில் மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்பட வேண்டிய 70 குடும்பங்கள் அபாயத்திற்குட்பட்ட இடங்களில் வசிப்பதாக அவதானிக்கப்பட்டது. மேலும் மீள் குடியேற்றத்திற்கான வழிகாட்டலில் 10.3 பிரகாரம் வீடுகள் நிர்மாணிக்கப்படுதல் தொடர்பாக நான்காவது தவணைப் பணமான ரூபா 25,000 விடுவிப்பதற்கு சார்பு சான்நினையை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை பெற்றுக் கொள்ளப்படாது 2021 திசெம்பர் மாதம் ஒரு பயன்பெறுனருக்கு ரூபா 300,000 மொத்தப் பணத்தையும் ஒரே முறையில் வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | வதிவதறகாக வேறு இடங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டு அபாயத்திற்குட் பட்ட பிரதேசங்களி லிருந்து குடும்பங்களை அப்புறப் படுத்தலினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |